**MINUTES OF THE PUBLIC HEARING MEETING FOR OBTAINING EVIRONMENTAL CLEARANCE FROM STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA) – TAMIL NADU FOR THE PROPOSED ROUGH STONE QUARRY OF M/s. A. KALPANA OVER AN EXTENT OF 1.00.0 HECTARE LOCATED IN S.F.NO. 135 (PART-4) OF IYANGUNAM VILLAGE, KILPENNATHUR TALUK, TIRUVANNAMALAI DISTRICT, CONDUCTED ON 22.05.2025 AT 11.00 AM IN M/s. KASTHURI AZHWAR THIRUMANA MANDABAM, SOMASIPADI, KILPENNATHUR TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Thiru. S. RajaKumar | Revenue Divisional Officer, Tiruvannamalai. |
| 2. | Tmt. T. Kalaiselvi | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai |
| 3. | Selvi. R. Vijayashree | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 4. | Thiru. V. Kathirvelan | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 5. | Thiru. Venugopal | Deputy Tahsildar, Kilpennathur, Tiruvannamalai. |
| 6. | Thiru. Govindhan | Revenue Inspector, Kilpennathur, Tiruvannamalai. |
| 7. | Thiru. Arulmurugan | Assistant Geologist, Geology and Mining, Tiruvannamalai. |
| 8. | Thiru. Kannan | Village Administrative Officer, Kanalapadi. |
| 9. | Public and NGOs | 41 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, on behalf of the Tamil Nadu Pollution Control Board has welcomed the Revenue Divisional Officer, Tiruvannamalai who presided the public Hearing meeting, the Government officials, the public & the NGOs and explained the need of the Public Hearing for obtaining Environmental Clearance for the proposed Rough stone quarry as follows.

"The public hearing meeting is being conducted for the proposed project of M/s. A. Kalpana Rough stone Quarry over an extent of 1.00.0 hectare in Iyangunam Village, Kilpennathur Taluk, Tiruvannamalai District for obtaining prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority (SEIAA) as per the Environmental Impact Assessment Notification 2006."

As per EIA Notification 2006, the mining projects (Individual or Cluster) having extent above 5 hectare requires prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority. This public hearing meeting will be recorded and submitted in the form of audio and video to the State Environment Impact Assessment Authority. Accordingly, the public notice for this public hearing was published in dailies of "The New Indian Express" (English) & "Daily Thanthi" (Tamil) on 16.04.2025 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed Rough stone quarry of M/s. A. Kalpana which is to be conducted at M/s. Kasthuri Azhwar Thirumana Mandabam on 22.05.2025 @ 11.00 AM.

The District Environmental Engineer further stated that the project proponent will explain the proposed quarry project and its Environmental Impact Assessment Study report details through power point presentation. Following the presentation, the general public and NGOs can express their views, suggestions and comments on the said project one by one either in oral or in written format during when; the public should tell their name and their village name. The opinions & suggestions of the public & environmentalists will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority. Thereafter, the authority will consider the issue of Environmental Clearance to this proposed quarry. The Revenue Divisional Officer, Tiruvannamalai will inaugurate the public hearing meeting thereafter the project proponent will explain the Environmental Impact Assessment Study report."

The Revenue Divisional Officer, Tiruvannamalai requested the project proponent to explain about the proposed rough stone quarry and the Environmental Impact Assessment study conducted by them to the public in detail and general public to mention their name and their village name while express their views, suggestions and comments on the said project.

On behalf of the project proponent, Tmt. K. Abirami, Coordinator, M/s. Global Mining Solutions, Salem (Consultant for the proposed rough stone quarry of M/s. A. Kalpana) explained the details of the project and the Environmental Impact Assessment study conducted by them through power point presentation.

Subsequently, the Revenue Divisional Officer, Tiruvannamalai requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one.

The following are the views/suggestions/comments represented by the public.

**1. Thiru. Andrews, Iyangunam Village (Farmer's Association President)**

He stated that, "This quarry has provided a significant employment opportunity to our village people and the panchayat receives necessary financial assistance. The quarry is useful in constructing cement roads and canals. Similarly, the quarry's proximity is being beneficial for the villagers and receives Rs.5 lakhs for the educational development of Iyangunam village children. This has generated good income for the villager people also" and concluded his speech by **expressing his support** for the proposed quarry.

**2. Mrs. L. Velankanni Lawrence, Somasipadi Village.**

She stated that, "Greetings to all the officials and the public present over here. I was born in Iyangunam village. Our Iyangunam panchayat receives all revenue through the Kalpana Quarry. The quarry provides essential materials like M-sand, Blue metal jelly for the construction of houses and all kinds of building. Upon a small request, the quarry readily supplies even half a unit of M-sand for house construction.

"Finally, she thanked and concluded by **supporting the quarry's** presence.

**3. Thiru. Paulraj, Somasipadi Village.**

He addressed the Revenue Divisional Officer and District Environmental Engineer and stated that, "To my knowledge, the Kalpana Quarry has been providing educational support to our village children for the past 7-8 years. They promptly provide materials like jelly and sand for building construction, including tuition platforms for students. By operating the quarry, the village students get educational support continuously." He expressed heartfelt appreciation on the arrival of the quarry and concluded by concluded by supporting the proposed quarry.

**4. Thiru. Sathish, Vatraputhur Village**

He stated that, "Greetings to all. The quarry has brought significant development and benefits to our village. They are extending their aid for temple festivals, educational initiatives, and house construction and transportation at low costs." He wished the project proponent and concluded by **expressing support** for the quarry's presence.

**5. Thiru. Amalanathan, Kovilmedu,**

He said that, "The Kalpana Quarry provides employment opportunities to local people. The owner of M/s. Kalpana Blue Metals offers his support to various events, including sports competitions and other functions in the surrounding villages of Iyngunam, Kalnapadi, Somasipadi, Kalambai. They generously provide materials like blue metal jelly and sand for temple festivals, Kumbabishekam ceremonies, and other community activities. The quarry also supports educational initiatives. The quarry brings immense benefits to the local community." Finally she thanked and concluded by **supporting** the quarry's presence.

**6. Thiru.R. Sivakumar, Arignar Anna Vivasaya Sangam, Somasipadi Village,**

He greeted the gathering, including the Revenue Divisional Officer of Tiruvannamalai, District Environmental Engineer, revenue officials from Kilpennathur, farmers, social activists, members of farmers' associations,

and the general public present over there. He stated that, "Even though environmental laws are laid down and river sand is exploited, it is necessary to improve the economy. Because, the stones are broken in mountain quarries and has been distributed to our people without causing any harm to anyone. Iyangunam village is close to our panchayat and it creates employment for many people where all the material is carried over to. The economy of many people has been enhanced for those who break the stone, those who load the stone into carts, and those who do business with it and environmental activists should plant trees nearer to the quarry. Because it is not going to end within 10 years or 15 years. Since this is a material that needs to be extracted over time, it is important to know which trees will not affect the surrounding by it and plant those trees nearby to avoid environmental pollution."

He also said that, "Being from Kanalapadi village, Thiru. Adhimoolam has contributed his support as monthly salaries to many families and enabling numerous students to progress to higher levels since the educational institutions have been upgraded by him. The proponent's philanthropic efforts have also improved the lives of marginalized communities, such as Scheduled Castes and Backward Classes." He concluded his speech by **expressing his support** for the establishment of the quarry.

(At this juncture, the Revenue Divisional Officer emphasised the public to express their views in a clear and concise manner so as to give opportunity for everyone to express their views.)

**7. Thiru. Sangeetha Murugan, Iyangunam Village (Former Panchayat Council Chairman).**

He stated that, "Greetings to all. Our opinion on this stone quarry meeting is that I have personally donated Rs. 20 lakhs for four schools (primary school to the high school level) through Thiru. Adhimoolam wherein the children of those schools were benefitted. I have also facilitated the construction of a panchayat tar road and a side canal with Rs.50 lakhs

from the quarry funds of this proposed quarry. Personally, we belong to the Aadi Dravidar community and there is no temple in our village. Thiru. Adhimoolam himself has built the temple for our community. Moreover, he has adopted six children and providing education to them." And he concluded by expressing support for the proposed quarry's establishment.

**8. Thiru. Ramesh, Somasipadi Village.**

He stated that, "Not just our village, but farmers from within 10 km radius have also received benefits. The quarry's presence has improved road accessibility for tractors and other vehicles. The owner provides materials at affordable prices and offers educational assistance when requested. This quarry has been beneficial to farmers and the general public. He also plants saplings whenever requested." Finally he concluded by **expressing support** for the quarry's establishment.

**9. Thiru. Nagaraj, Vatraputhur Village,**

He said, "I'm not against the quarry. During the project presentation, if the explanation is given in detail, everyone will understand what's happening around. Two quarries and Kesar tar plant are being operated there, but no committee has conducted an inspection to assess the impact of the tar plant on people. The quarry is carrying out blasting in the evening time and causing environmental pollution. The extent of pollution can only be understood if people visit the site. Quarries are essential for construction, but certain rules and regulations must be followed. Somebody says there's no noise, but noise is inevitable during blasting, especially at night and it is noticeable near the church. Everyone knows that it is impossible to blast without noise.

(At this juncture, a person in the gathering raised his voice in opposition to Thiru. Nagaraj's speech) and Thiru. Nagaraj continued as, "Don't get angry. I'm trying to make everyone understand the situation here." And he concluded.

(The District Environmental Engineer requested the audience to remain silent while one person is speaking.).

**10. Thiru. Suresh, Iyangunam Village.**

He said, "The owner of Kalpana Blue Metals has done many good deeds for our village. Over 500 trees have been planted around the hill, which has improved the environment. Various tree species, including Pungai and Puliyamarams (Indian beech and tamarind trees), have been planted." He concluded by **expressing support** for the quarry establishment.

**11.Thiru. Kumaravel, Iyangunam Village.**

He said, "As someone mentioned earlier, blasting does cause noise and dust and the blasting is carried out typically between 4-6 pm in the evening. The crusher unit also generates dust pollution. However, the trees in the surrounding area mitigate the impact, and no one is significantly affected. Whether it is the construction works or the general public works of the village, everything is getting along well. Therefore, there is no objection to setting up a quarry or crusher." He concluded by **expressing support** for the quarry's presence.

**The following 9 nos. of the public have expressed their opinion in writing on the proposal of this Rough stone quarry. All the 9 nos. have expressed their support to the operation of this quarry.**

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1. | Tmt. P. Kalamma, Telangana. | Expressed support in favour of the proposed quarry. |
| 2. | Tmt. V.Narayanamma, Hyderabad. | Expressed support in favour of the proposed quarry |
| 3. | Thiru. S. Inbasekaran, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 4. | Thiru. K. Govardhan, Hyderabad. | Expressed support in favour of the proposed quarry |
| 5. | Thiru. K. Shankar, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 6. | Thiru. P. Sydaiah, Telangana.. | Expressed support in favour of the proposed quarry |
| 7. | Tmt. K. Vinoda, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 8. | Thiru. U. Ramachandra, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |

| | | |
|---|---|---|
| 9. | Thiru. A. Subramanyam, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |

As there were no views/comments raised further, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, with the approval of Revenue Divisional Officer, Tiruvannamalai, has announced that the meeting came to an end with the vote of thanks.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 16.04.2025 for notifying the public hearing meeting)
2. The certificate issued by the Village Administrative Office for the Audio announcement and issue of notices.
3. Attendance sheet at the public hearing (05pages/41persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing/Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. EIA Report & Executive summary (Tamil & English).
7. Petitions received through Public Hearing Meeting – 9 nos.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

**Revenue Divisional Officer,**
**Tiruvannamalai.**

**திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், ஐங்குணம் கிராமத்தில் புல எண்கள். 135 (Part-4)-ல் 1.00.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. A. கல்பனா சாதாரண கல் குவாரி சுரங்கத்திற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 22.05.2025 அன்று திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், சோமாசிபாடியில் அமைந்துள்ள திரு. கஸ்தூரி ஆழ்வார் திருமண மண்டபத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. S. ராஜகுமார் | வருவாய் கோட்ட அலுவலர்,<br>திருவண்ணாமலை. |
| 2. | திருமதி. தி. கலைச்செல்வி | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 3. | செல்வி. இரா. விஜயஸ்ரீ | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 4. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 5. | திரு.வேணுகோபால் | துணை வட்டாட்சியர்,<br>கீழ்பென்னாத்தூர்,<br>திருவண்ணாமலை. |
| 6. | திரு.கோவிந்தன் | வருவாய் ஆய்வாளர்,<br>கீழ்பென்னாத்தூர்,<br>திருவண்ணாமலை. |
| 7. | திரு. அருள்முருகன் | உதவி புவியியலாளர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>திருவண்ணாமலை. |
| 8. | திரு. கண்ணாளன் | கிராம நிர்வாக அலுவலர்,<br>கானலாடி. |
| 9. | பொதுமக்கள் மற்றும்<br>சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (41 நபர்களின் பட்டியல்<br>இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு

தலைமை வகித்த வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை அவர்களையும், கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த அரசு அதிகாரிகளையும், பங்கேற்ற பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அவசியத்தை பின்வருமாறு எடுத்துரைத்தார்.

"திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், ஐங்குணம் கிராமத்தில், 1.00.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். A. கல்பனா சாதாரண கல் சுரங்க நிறுவனமானது பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006–ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை ஒலி மற்றும் ஒளி பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள். A. கல்பனா சாதாரண கல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தி/ள். கஸ்தூரி ஆழ்வார் திருமண மண்டபத்தில் 22.05.2025 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறுமென தினத்தந்தி மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பரஸ் செய்தி தாள்களில் 16.04.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும்

சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் போது பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினர் இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்வார்கள். தற்போது வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை தொடங்கி வைப்பார்கள். அதன் பின்னர் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள்"

வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் சுரங்க நிர்வாகத்தினரை உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார். மேலும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கும் போது தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் குறிப்பிட்டு கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திருமதி. கே. அபிநயா, ஒருங்கிணைப்பாளர், தி/ள். குளோபல் மைனிங் சொல்யுசன்ஸ், சேலம் (தி/ள். A. கல்பனா சாதாரண கல் குவாரி திட்டத்தின் ஆலோசகர்) அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார். அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1. திரு. R.V. ஆண்டிரூஸ், ஐங்குணம் கிராமம் (விவசாய சங்கத் தலைவர்).**

இவர் கூறுகையில்," இந்த குவாரி நடப்பதினால் எங்கள் ஊர் மக்களுக்கு அதிக வேலைவாய்ப்பு கிடைக்கிறது. பஞ்சாயத்துக்கு தேவையான நிதி உதவி கிடைக்கிறது. சிமெண்ட் சாலைகள், கால்வாய்கள் அமைக்க இந்தக் கல்குவாரி பயனுள்ளதாக அமைகிறது. அதேபோல், ஊர்மக்களுக்கும் அருகிலேயே இந்தக் கல்குவாரி அமைவதால் நல்ல வாய்ப்பாக உள்ளது. ஐங்குணம் கிராமத்து பிள்ளைகளின் கல்வி மேலாண்மைக்கு 5 லட்சம் ரூபாய் நிதி உதவி கிடைக்கிறது. இதனால் ஊர் மக்களுக்கு நல்ல வருவாய் தரக்கூடியதாக உள்ளது" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**2. திருமதி. L. வேளாங்கண்ணி லாரன்ஸ், சோமாசிபாடி கிராமம்.**

இவர் கூறுகையில்," வருகை புரிந்து இருக்கும் அனைத்து அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் வணக்கம். கல்பனா குவாரி மூலம் எங்கள் ஐங்குணம் பஞ்சாயத்துக்கு அனைத்து விதமான வருவாயும் கிடைக்கிறது. பொதுமக்களுக்கு வீடு கட்ட ஜல்லி, சிறு ஜல்லி மற்றும் M–sand, அரை யூனிட் கேட்டால் கூட உடனடியாக தந்து அனைத்து கட்டிடங்கள் கட்டுவதற்கும் இந்த கல்பனா குவாரி மூலம் பயனுள்ளதாக அமைகிறது" என்று கூறி தனது நன்றியை தெரிவித்து குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**3. திரு. S. பால்ராஜ், த/பெ. செல்வம், சோமாசிபாடி கிராமம்.**

இவர் கூறுகையில், வருவாய் கோட்ட அலுவலர் அவர்களையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களையும் வரவேற்று, "எனக்குத் தெரிந்து இந்தக் கல்பனா கல்குவாரியானது ஏழ எட்டு வருடங்களாகவே எங்கள் ஊரில் படிக்கும் பின்ளைகளுக்கு கல்வி சம்பந்தமான உதவிகளை செய்து வருகின்றனர். எங்கள் ஊருக்கு உடனடியாக கேட்ட உடனே ஜல்லி, மணல், படிக்கும் பிள்ளைகளுக்கு டியூஷன் மேடை அமைப்பது மற்றும் கல்வி சம்பந்தமாக அனைத்து உதவிகளையும் உடனடியாக செய்து வருகிறார். இந்தக் கல்குவாரி நடத்துவதால் எங்கள் ஊர் படிக்கிற பிள்ளைகளுக்கு தொடர்ந்து உதவி செய்து வருகிறார். இந்தக் கல்குவாரி அமைவதற்கு மனதார வாழ்த்துகிறோம்" என்று குவாரி

அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**4. திரு. சதீஷ், த/பெ. இராதாகிருஷ்ணன், வட்ராப்புத்தூர் கிராமம்.**

இவர் கூறுகையில், "அனைவருக்கும் வணக்கம். இந்தக் குவாரியினால் எங்கள் ஊராட்சிக்கு வளர்ச்சி சிறப்பாகவும் அருமையாகவும் கிடைக்கிறது. கோவில் திருவிழாக்கள், கல்வி சம்பந்தப்பட்ட மற்றும் வீடுகளுக்கு குறைந்த செலவிலும், போக்குவரத்து செலவு குறைவாகவும் சிறப்பாக செய்கின்றனர். அவரது பணி சிறக்க வாழ்த்துகள்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**5. திரு. அமலநாதன், கோவில் மேடு.**

இவர் கூறுகையில், "இந்த கல்பனா குவாரி இயக்கத்தினால் சுற்றுவட்டார பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. அருகிலுள்ள கிராமங்களான ஐங்குணம், கால்னாபாடி, சோமாசிபாடி, கலம்பை ஆகிய கிராமங்களில் வசிக்கும் வாலிபர்களின் விளையாட்டு போட்டிகள் மற்றும் பிற நிகழ்ச்சிகளுக்கு உதவி கேட்டால் இந்த கல்பனா புளூ மெட்டல்ஸ் உரிமையாளர் சிறப்பாக செய்து தருகிறார். மேலும் கோவில் சம்மந்தப்பட்ட பணி கட்டுவதாகட்டும் கும்பாபிஷேகம் ஆகட்டும் ஜல்லி, மணல் எது கேட்டாலும் இலவசமாக தருகிறார். அதனால் ஆன்மிக பணியும் நல்ல சிறப்பாக நடைபெறுகிறது. கல்வி சம்பந்தப்பட்ட அனைத்து உதவிகளையும் செய்கிறார். இதனால் அருகாமையிலுள்ள அனைத்து பொதுமக்களுக்கும் நன்மையே தவிர வேறு எந்த தீங்கும் இல்லை" என்று கூறி தனது நன்றியை தெரிவித்து குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**6. திரு. R. சிவக்குமார், அறிஞர் அண்ணா விவசாய சங்கம், சோமாசிபாடி கிராமம் .**

இவர் இந்த சுற்றுச்சூழல் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள திருவண்ணாமலை வருவாய் கோட்ட அலுவலர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கீழ்ப்பென்னாத்தூர் வருவாய் துறை அலுவலர்கள், விவசாய பெருமக்கள், சமூக ஆர்வலர்கள், விவசாய சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு வணக்கத்தை தெரிவித்து பின் வருமாறு கூறினார்."இன்றைக்கு சுற்றுச்சூழல் மாசு கட்டுப்பாடு சட்டங்களை விதித்தாலும் கூட ஆற்று மணல்கள்

தோண்டப்பட்டு அடியோடு நின்று இருக்கும் பொருளாதாரத்தை மேம்படுத்தப்பட வேண்டும். ஏன் என்று சொன்னால் மலை குவாரிகளில் கற்கள் உடைக்கப்பட்டு அது யாருக்கும் எந்தவித பாதிப்பும் இல்லாமல் எங்கள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கங்கள் தான். ஏனென்று சொன்னால் ஐங்குணம் என்பது எங்கள் ஊராட்சிக்கு அருகாமையில் இருப்பதினால் அடிப்படை கட்டமைப்பு வசதி உருவாக்க தேவையான அந்த பொருட்கள் எல்லாம் எடுத்துச் செல்வதால் பல பேருக்கு வேலைவாய்ப்புகள் கூட உருவாகிறது. கல் உடைப்பவர்கள் அந்த கல்லை வண்டிக்கு ஏற்றுபவர்கள் கல்லை தரம் பிரிப்பவர்கள் அதில் வியாபாரம் செய்வார்கள் என பல பேர்களின் பொருளாதார உயர்ந்து இருக்கிறது இன்றைக்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அதன் அருகாமையில் மரங்கள் நட வேண்டும் ஏனென்றால் இது பத்தாண்டுகள் 15 ஆண்டுகளில் நிறைவு அடைவது அல்ல. இது காலங்காலமாக எடுக்கப்பட வேண்டியது ஒரு பொருளாக இருக்கும் காரணத்தினால் சுற்றுச்சூழல் மாசு ஏற்படாதவாறு அதன் அருகாமையில் எந்த மரங்கள் வைத்தால் பாதிக்காது என்று தெரிந்து அந்த மரங்கள் நட வேண்டும்.

ஆதிமூலம் என்பவர் கானலாப்பாடியை சேர்ந்தவர் என்பதால் கல்வி வளர்ச்சிக்கு உதவி செய்பவர். எத்தனையோ குடும்பங்கள் அவரிடம் மாதாந்திர ஊதியம் வாங்கி பிழைக்கின்றனர் என்பதும் தெரியும். கல்வி நிலையங்களின் மேம்படுத்தப்பட்டு கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு எத்தனையோ பேர் படித்து மேல் நிலைக்கு சென்று இருக்கிறார்கள். அந்த பகுதிகளில் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களின் நிலை உயர இந்த கல்பனா கல்குவாரி தொண்டு செய்கிறது" என குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

(அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டியதால் தனது கருத்துக்களை சுருக்கமாகவும் தெளிவாகவும் தெரிவிக்க வேண்டுமென்று வருவாய் கோட்ட அலுவலர் அவர்கள் தெரிவித்தார்)

**7. திரு. சங்கீதா முருகன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், ஐங்குணம்.**

இவர் கூறுகையில், "அனைவருக்கும் வணக்கம். இந்த கல்குவாரி கருத்து கேட்பில் எங்கள் கருத்து என்னவென்றால் ஒவ்வொரு ஆரம்பப் பள்ளி முதல் உயர்நிலைப் பள்ளி வரை என் கையால் நான்கு பள்ளிகளுக்கு 20 லட்சம் வரையோலை ஆதிமூலம் அவர்கள் வாயிலாக எடுத்துக் கொடுத்துள்ளேன். அதனால் அந்த பள்ளி குழந்தைகளுக்கு நன்மைகள் நடக்கிறது. அது மட்டும் இல்லாமல் அந்த கல்குவாரியின் நிதியில் இருந்து ரூபாய் 50 லட்சம் மூலம் பஞ்சாயத்து தார் சாலை அமைத்துள்ளேன், பக்க கால்வாய் அமைத்துள்ளேன். தனிப்பட்ட முறையில் கூற வேண்டும் என்றால் நாங்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். எங்கள் ஊரில் கோயில் இல்லை. திரு. ஆதிமூலம் அவர்கள் தான் கோவில் கட்டி கொடுத்துள்ளார். அதன் வேலை இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. மேலும் அவர் ஆறு குழந்தைகளை தத்து எடுத்து படிக்க வைத்து வருகிறார்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**8. திரு. ரமேஷ், சோமாசிபாடி கிராமம்.**

இவர் கூறுகையில், " இந்த கிராமம் மட்டுமல்லாமல் 10 கிலோ மீட்டருக்கு உள்ள அனைத்து விவசாயிகளும் பயன்பெறுகின்றனர். டிராக்டர் செல்ல வசதியாக இருக்கிறது. எல்லா பொருட்களும் குறைந்த விலையில் தருகிறார். படிப்பு உதவி கேட்டால் செய்கிறார். இதனால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயன் பெறுகிறார்கள். மரம் வைக்க கேட்டுக்கொண்டால் மரம் வைத்து தருவார்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**9. திரு. நாகராஜ், வட்ராப்புத்தூர் கிராமம்.**

இவர் கூறுகையில், " நான் குவாரிக்கு எதிரான ஆள் கிடையாது. திட்டவுரை வழங்கும் பொழுது பொறுமையாக விளக்கினால் அனைவருக்கும் புரியும்படி இருக்கும். என்ன நடக்கிறது என்று அனைவருக்கும் தெரியப்பட வேண்டும். அங்கு இரண்டு குவாரிகள் மற்றும் கேசர் தார்சாலை அமைந்துள்ளது அந்த கேசர் தார்சாலை மூலம் எத்தனை பேர் பாதிக்கப்படுகின்றனர் என எந்த குழுவும் இதுவரை வந்து ஆய்வு மேற்கொள்ளவில்லை. குவாரியில் மாலை

நேரங்களில் வெடி வைக்கின்றனர். அதனால் அங்கு சுற்றுச்சூழல் மாசு ஏற்படுகிறது. எவ்வளவு மாசு ஏற்படுகிறது என்று அங்கு மக்கள் வந்து பார்த்தால் தான் தெரியும். கட்டுமானத்திற்கு குவாரி மிகவும் முக்கியமானது. இருப்பினும் ஒரு சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும். சத்தம் இல்லை என்று கூறுகின்றனர். ஆனால் சத்தம் கண்டிப்பாக இருக்கிறது. இரவு நேரங்களில் சர்ச் பக்கம் போனால் அது தெரியும். கண்டிப்பாக சத்தம் இல்லாமல் வெடி வைக்க முடியாது. அது அனைவருக்கும் தெரியும்".

(அப்பொழுது கூட்டத்திலிருந்து ஒருவர், அவரது உரையை எதிர்த்துக் கூறினார்)

மீண்டும் அவர் "நீங்கள் கோவம் கொள்வதில் எந்த ஒரு பயனும் கிடையாது. இங்கு இருப்பதை அனைவருக்கும் புரிய வைக்க வேண்டும் என்று தான் கூறுகிறேன்" என்று நன்றி கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

(மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் ஒருவர் பேசும் பொழுது மற்றவர்கள் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்)

**10. திரு. சுரேஷ், த/பெ. சுப்பிரமணி ஐங்குணம் கிராமம்.**

இவர் கூறுகையில், "எங்கள் ஊருக்கு கல்பனா புளூ மெட்டல்ஸ் உரிமையாளர் பல நன்மைகள் செய்துள்ளார். தற்போது மலையை சுற்றி 500 மரங்களுக்கு மேல் வைத்துள்ளார். சுற்றுச்சூழல் தற்போது அங்கு நன்றாகவே உள்ளது. கடந்த ஏழு எட்டு வருடங்களாக புங்கமரம், புளியமரம் போன்ற பலவகையான மரங்களை நட்டு வைத்துள்ளார்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்

**11. திரு. குமரவேல், ஐங்குணம் கிராமம்.**

இவர் கூறுகையில், "முன்பு ஒருவர் கூறியது போல வெடி வைத்தால் சத்தம் மற்றும் தூசு ஏற்படும். 4 மணி முதல் 6 மணிக்குள் சரியாக வெடி வைக்கப்படுகிறது. கிரேஷரில் இருந்து தூசு மாசு ஏற்படும். ஆனால் அங்கு சுற்றி நிறைய மரங்கள் உள்ளன. அதனால் யாருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. கட்டுமான தொழில் ஆகட்டும் ஊரின் பொது வேலை ஆகட்டும் அனைத்தும் நல்ல முறையில் நடைபெறுகிறது. எனவே, கிரஷர் அமைப்பதற்கும் குவாரி வைப்பதற்கும் எவ்வித

ஆட்சேபனையும் கிடையாது" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**கீழ்கண்ட 9 நபர்கள் எழுத்துமூலமாக இக்குவாரி அமைவது குறித்த தங்களின் கருத்துகளை தெரிவித்தனர். இதில் 9 நபர்களும் குவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர்.**

| வ. எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1. | திருமதி.P. கலம்மா, தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 2. | திருமதி.V. நாராயணம்மா, ஹைதராபாத். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 3. | திரு.S. இன்பசேகரன், ராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 4. | திரு.K. கோவர்தன், ஹைதராபாத். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 5. | திரு.K. சங்கர், தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 6. | திரு.P. சைதையா, தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 7. | திருமதி. K. வினோதா, தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 8. | திரு.U. இராமசந்திரா, ஆந்திரப் பிரதேசம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 9. | திரு. A. சுப்ரமணியம்,<br>ஆந்திர பிரதேசம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை அவர்களின் ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்.

**<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 16.04.2025).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.

3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (05 பக்கங்கள்/41 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் வாயிலாக பெறப்பட்ட 9 மனுக்கள்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை**

**வருவாய் கோட்ட அலுவலர்,**
**திருவண்ணாமலை.**